**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 103/2024**
**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமசிவன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வள்ளிநாயகம் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | ஆலங்குளம் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 21st, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்ட நெடுஞ்சாலை ரோந்து பிரிவு-2 ல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 18.03.2019 ம் தேதி, பகல் 11.30 மணிக்கு கடையம் காவல்நிலைய தலைமைக்காவலர் ஜோசப்பொன்ராஜ், இரண்டாம்நிலைக்காவலர் பேச்சிமுத்து என்பவர் உதவியுடன் முருகன் என்பவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட லாட்டரி டிக்கெட்டுகள் விற்பனை வைத்திருந்ததாக கூறி லாட்டரி டிக்கெட்டுகளை அத்தாட்சியில் கைப்பற்றி முருகன் என்பவருடன் நிலையம் வந்து கொடுத்த அத்தாட்சியை பெற்று அதன் தன்மைக்கேற்ப கடையம் காவல்நிலைய குற்ற எண்.103/2019, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 506(2) இதச மற்றும் 3 of TNPPDL Act r/w 5 & 7(3) of Lottery Regulation Act-ன் படி வழக்கு பதிவு செய்தேன். முதல்தகவல்அறிக்கை மற்றும் அத்தாட்சியின் அசலை அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர்

அதிகாரிகளுக்கும், ஒரு நகலை கடையம் வட்ட காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.15 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. புள்ளி விபரக்கணக்கிற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:06:38 +0530